# கிராமின் கிருஷி மவுசம் சேவா

இந்திய வானிலை துறை

**தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்**

**கோவை, தமிழ்நாடு**

## அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 23-01-2024**

**திருவள்ளூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2024-01-23 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2024-01-24 | 2024-01-25 | 2024-01-26 | 2024-01-27 | 2024-01-28 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 31.0 | 31.0 | 31.0 | 30.0 | 30.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 22.0 | 22.0 | 22.0 | 22.0 | 22.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 90 | 90 | 90 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8 | 8 | 10 | 12 | 12 |
| காற்றின் திசை (கோணம்) | 140 | 110 | 50 | 50 | 50 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 0 | 3 | 0 | 3 | 6 |

### வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலையாக காணப்படலாம்; அதிகபட்ச வெப்பநிலை 30.0°C- 31.0°C ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 22.0°C ஆகவும் இருக்கலாம்; காற்றின் ஈரப்பதம் 50-90% வரை எதிர்பார்க்கப்படுகிறது; காற்றின் வேகம் மணிக்கு 8.0-12.0 கி.மீ வரை இருக்கலாம்; காற்றின் திசை வடக்கு முதல் வட கிழக்கிலிருந்து வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

28.01.2024 முதல் 03.02.2024 வரை தமிழ்நாட்டில் மழைப்பொழிவு இயல்பை விட குறைவாகவும், அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பு நிலையில் பதிவாகக்கூடும்.

### குறுஞ்செய்தி :

விவசாயிகள் மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்துத் பயிர்களுக்கு நீர் பாசனம் மேற்கொள்ளவும்.

### பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | தற்போது நிலவும் வானிலை காரணமாக நெற்பயிரில் பின்வரும் பூச்சி மற்றும் நோய் தாக்கம் காணப்படலாம்;1. இலைப்பேன்- |

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | நாற்றங்கால் (20 சென்ட்) தியாமெதோக்ஸாம் 25% WG 4 கிராம் என்ற வீதம் 40 லிட்டர் தண்ணிரில் கலந்து தெளிக்கவும்; 2).தண்டுத்துளைப்பான்- ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் வீதம் அல்லது ஏக்கருக்கு ப்ளூபெண்டியாமைடு 20% WP 50 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 3). இலை சுருட்டுப்புழு தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு குளோரான்ட்ரானிலிப்ரோல் 18.5% SC 60 கிராம் வீதம் அல்லது ஏக்கருக்கு அசாடிராக்ட்டின் 0.03% 400 மில்லி லிட்டர் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்; 4.செம்புள்ளி நோய் தாக்கம் தென்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு ப்ரோபிநெப் 70% WP 600-800 கிராம் அல்லது ஏக்கருக்கு ப்ரோபிநெப் 54.2% மற்றும் ட்ரைசைக்ளோசோல் 15 % WP கலந்து 500 கிராம் என்ற வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். |
| உளுந்து | உளுந்து பயிறு- விதை நேர்த்தி- விதைப்பிற்கு முன் ஒரு கிலோ விதைக்கு டிரைக்கோ டெர்மா விரிடி 4 கிராம் வீதம் அல்லது ஒரு கிலோ விதைக்கு சூடோமோனாஸ் ஃப்ளோரசன்ஸ் 10 கிராம் வீதம் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும். |
| நிலக்கடலை | நிலக்கடலை- வளர்ச்சி நிலை- நிலவும் வானிலை காரணமாக நிலக்கடலை பயிர்களில் முன் பருவ இலைப்புள்ளி நோய் தாக்கம் காணப்பட்டால் கட்டுப்படுத்த ஏக்கருக்கு கார்பன்டாசிம் 200 கிராம் அல்லது ஏக்கருக்கு குளோரோதலோனில் 400 கிராம் வீதம் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மிளகாய் | நிலவும் வானிலை காரணமாக மிளகாய் பயிர்களில் இலைப்பேன் தாக்கம் தாக்கம் காணப்பட்டால் கட்டுப்படுத்த இமிடகிலோபிரிட் 17.8% SL 10 லிட்டர் தண்ணீருக்கு 3 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம் அல்லது பைப்ரோனில் 5% SC 0.6 1 லிட்டர் தண்ணீருக்கு 1.5 மில்லி லிட்டர் வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். |
| கத்திரிக்காய் | கத்தரி- பூ பருவம் முதல் அறுவடை நிலை- நிலவும் வானிலை காரணமாக கத்தரி பயிர்களில் பின்வரும் பூச்சி மற்றும் நோய் தாக்கம் காணப்படலாம்; 1.காய்த் துளைப்பான் கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை சாறு 5 சதம் அல்லது டைமெத்தோயேட் 30 % EC 10 லிட்டர் தண்ணீருக்கு 7 மில்லி லிட்டர் வீதம் கலந்து தெளிக்கவும்; 2.சிற்றிலை அல்லது சிறு இலை நோய் கட்டுப்படுத்த டைமெத்தோயேட் 30 EC ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மில்லி லிட்டர் என்ற வீதம் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம். மேலும் நோய் தாக்கப்பட்ட இலையினை அகற்றி விடலாம். |
| வெண்டை/ லேடிஸின் விரல் | நிலவும் வானிலை காரணமாக வெண்டை பயிர்களில் மஞ்சள் நரம்பு தேமல் நோய் தாக்கம் கட்டுப்படுத்த அசாடிராக்ட்டின் 0.03 WSP 10 லிட்டர் தண்ணீருக்கு 5 கிராம் வீதம் அல்லது தியாமேதோக்சாம் 25 WG 2 லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் வீதம் தெளிப்பதன் நோய் பரப்பும் வெள்ளை ஈ கட்டுப்படுத்தலாம். |